பத்திரிக்கை செய்தி

12.07.2007
சென்னை

செய்தி வெளியீடு எண்: 433

# வெளி வட்டச் சாலை திட்டம்

சென்னைப் பெருநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டும், பெருநகர வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் பெருநகரின் வெளி ஓரத்தில் வெளிவட்டச் சாலை அமைக்க திட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் வளர்ச்சிப் பணிகளை குழுமத்தின் தலைவரும், செய்தித்துறை அமைச்சருமான திரு. பரிதி இளம்வழுதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இச்சாலையானது வண்டலூரில் தேசிய நெடுஞ்சாலை எண். 45—ஐயும், நசரத்பேட்டையில், தேசிய நெடுஞ்சாலை எண்.4—ஐயும், நெமிலிச்சேரியில் தேசிய நெடுஞ்சாலை எண்.205—ஐயும், நல்லூரில் தேசிய நெடுஞ்சாலை எண். 5—ஐயும், மீஞ்சூரில் திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையையும் இணைக்கிறது. இச்சாலையின் நீளம் 62.3 கிமீ ஆகும். மேலும் இச்சாலையில், சாலை மற்றும் தொடர்வண்டிப் பாதை அமைப்பதற்கு முறையே 72.0 மீட்டர் அகலமும், 50.0 மீட்டர் அகலமும் பிற்கால அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உத்தேசிக்கப்பட்ட தொகை ரூபாய் 900 கோடியாகும்.

இது குறித்து மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி கூறியதாவது: இத்திட்டத்திற்கான நிலஎடுப்பு பணிகள் இரண்டு கட்டமாக நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக தேசிய நெடுஞ்சாலை எண்.

45 முதல் தேசிய நெடுஞ்சாலை எண் 205 வரை உள்ள சுமார் 29.5 கிமீ நீளத்திற்கு 29 கிராமங்களில் நிறைவு செய்யப்பட்டு மேற்கண்ட நிலங்கள் தற்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பொறுப்பில் உள்ளது. இரண்டாம் கட்டமாக தேசிய நெடுஞ்சாலை எண் 205 முதல் திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி வரையுள்ள 32.8 கி.மீ. நீளத்திலுள்ள 28 கிராமங்களில் 18 கிராமங்களில் 10.72 கி.மீ. நீளத்திற்கு நில எடுப்பு பணிகள் நிறைவு பெற்றுவிட்டது. மீதமுள்ள 10 கிராமங்களில் நில எடுப்பு பணிகள் நடைபெற்றுவருகிறது. இதை விரைவுபடுத்துவதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி முடியும் போது சென்னைப் பெருநகரின் போக்குவரத்து நெரிசலை ஓரளவிற்கு தீர்க்கப்படுவதோடு, ஒரு சிறந்த உலகத்தரம் வாய்ந்த போக்குவரத்து சாலையாக இது அமையும் என்றும் தெரிவித்தார்.

மேலும் இதுகுறித்து அவர் பேசும் போது, வெளிவட்டச் சாலை விரிவாக செய்யத்தக்கமைக்கான ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சாலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

========

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.